இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 332 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆனி 28 – சனிக்கிழமை 12 ஜூலை 2025 – மதுரை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 332 : Thiruvalluvar Year - 2056 - Aani 28 - Saturday 12 July 2025 - Madurai 16 Pages ₹ 5.00

## ரூ.100 கோடி மதிப்பீட்டில் – 1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட

# 63 திருக்கோயில்களின் புனரமைப்பு திருப்பணிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.7.2025) சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் அழகு முத்துக்கோன் அவர்களின் பிறந்தநாளையொட்டி சென்னை, எழும்பூர் இரயில் நிலையம் அருகில் அமைந்துள்ள மாவீரன் அழகு முத்துக்கோன் அவர்களின் திருவுருவச்சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ். இரகுபதி, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், வனம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, அ. வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், ஏ.எம்.வி. பிரபாகரராஜா, துணை மேயர் மு. மகேஷ் குமார், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், சென்னை மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவர் கே. எஸ். இரவிச்சந்திரன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**சென்னை, ஜூலை 11–**

**ரூ.100 கோடி மதிப்பீட்டில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட 63 திருக்கோயில்களின் புனரமைப்பு திருப்பணிகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.07.2025) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட 63 திருக்கோயில்களை அதன் பழமை மாறாமல் புனரமைக்கும் வகையிலான திருப்பணிகளை காணொலிக் காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார்.

அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க திட்ட செயலாக்கம், 3,297 திருக்கோயில்களில் குடமுழுக்கு, தொன்மையான திருக்கோயில்களை பழமை மாறாமல் புனரமைத்தல், புதிய திருத்தேர்கள் உருவாக்கம் மற்றும் திருத்தேர்களை பழுதுபார்த்து வீதிஉலா, திருக்குளங்களை புனரமைத்தல், பக்தர்களுக்கு அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்களை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுத்தல், அன்னதானத் திட்டம் விரிவாக்கம், மலைத் திருக்கோயில்கள் மற்றும் முக்கிய திருக்கோயில்களில் மருத்துவ மையங்கள் அமைத்தல், புதிய கல்வி நிறுவனங்கள் தொடக்கம், ஒருகால பூஜை திட்டம் விரிவாக்கம், துறையின் செயல்பாடுகளை கணினிமயமாக்குதல் போன்ற பல்வேறு திட்டங்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றதிலிருந்து இந்து சமய அறநிலையத்துறை வாயிலாக சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

### திராவிடக் கட்டிடக் கலை!

அந்த வகையில், மன்னர்களாலும், நமது முன்னோர்களாலும் கட்டப்பட்டு திராவிட கட்டடக் கலையின் பொக்கிஷங்களாக திகழும் தேவாரம் பாடல் பெற்ற மற்றும் மங்களாசாசனம் செய்யப்பட்ட திருக்கோயில்கள், இதர திருக்கோயில்களின் கட்டடக் கலை மற்றும் கல்வெட்டுகளின் அடிப்படையில் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட திருக்கோயில்களாக 714 திருக்கோயில்கள் கண்டறியப்பட்டு, அதன் தொன்மை மாறாமல் புனரமைத்து பாதுகாத்திடும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2022-2023 ஆம் நிதியாண்டு முதல் கடந்த மூன்று ஆண்டுகளில் ஆண்டிற்கு 100 கோடி ரூபாய் வீதம் 300 கோடி ரூபாயும், நடப்பாண்டிற்கு 125 கோடி ரூபாயும், என மொத்தம் 425 கோடி ரூபாயினை அரசு நிதியாக வழங்கியுள்ளார்.

அரசு நிதி, உபயதாரர் நிதி, திருக்கோயில் நிதி என மொத்தம் ரூ.571.55 கோடி மதிப்பீட்டில் ஆயிரம் ஆண்டுகள் பழமையான 352 திருக்கோயில்கள் திருப்பணிக்கு எடுத்து கொள்ளப்பட்டு, இதுவரை 60 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நிறைவு பெற்றுள்ளன. இவற்றில் தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், துக்காச்சி அருள்மிகு ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோயிலுக்கு தொன்மை மாறாமல் புனரமைத்து பாதுகாத்தமைக்காக 2024ஆம் ஆண்டிற்கான யுனெஸ்கோ விருது வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

அதனைத் தொடர்ந்து, ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட கன்னியாகுமரி மாவட்டம், பறக்கை, அருள்மிகு மதுசூதனப்பெருமாள் திருக்கோயில், தூத்துக்குடி மாவட்டம், அப்பன்கோயில், அருள்மிகு திருவேங்கடத்தப்பன் திருக்கோயில், திருநெல்வேலி மாவட்டம், பிரம்மதேசம், அருள்மிகு கைலாசநாதசுவாமி திருக்கோயில், திருப்புடைமருதூர், அருள்மிகு நாறும்பூநாதசுவாமி திருக்கோயில், மானூர், அருள்மிகு அம்பலவாணசுவாமி திருக்கோயிலின் உபகோயிலான இராஜகோபாலசுவாமி திருக்கோயில், வடக்கு அரியநாயகிபுரம், அருள்மிகு கைலாசநாதசுவாமி திருக்கோயில், மேலச்செவல், அருள்மிகு ஆதித்தவர்னேஸ்வரர் திருக்கோயில், சேரன்மகாதேவி, அருள்மிகு அம்மநாதசுவாமி திருக்கோயில், சேரன்மகாதேவி, அருள்மிகு வைத்தியநாதசுவாமி திருக்கோயில், வள்ளியூர், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலின் உபகோயிலான அருள்மிகு மீனாட்சி சொக்கநாதர் திருக்கோயில், கோவில்குளம், அருள்மிகு கிருஷ்ணசுவாமி வகையறா திருக்கோயிலின் உபக்கோயிலான அருள்மிகு தென்னழகர் திருக்கோயில், கடம்போடுவாழ்வு, அருள்மிகு கைலாசநாதசுவாமி மற்றும் வெங்கடாசலபதி திருக்கோயில்;

திருச்சி மாவட்டம், அல்லூர், அருள்மிகு பஞ்சநதீஸ்வரர் திருக்கோயில், அளுந்தூர், அருள்மிகு காசி விஸ்வநாதசுவாமி திருக்கோயில், ஆலத்துடையான்பட்டி, அருள்மிகு சோமநாதசுவாமி திருக்கோயில், தஞ்சாவூர் மாவட்டம், பரிதியப்பர் கோவில், அருள்மிகு பாஸ்கரேஸ்வரர் சுவாமி திருக்கோயில், திருவாய்பாடி, அருள்மிகு பாலுகந்தநாதசுவாமி திருக்கோயில், உடையாளூர், அருள்மிகு கைலாசநாதர் மற்றும் லெட்சுமிநாராயணப் பெருமாள் திருக்கோயில், திருநரையூர், அருள்மிகு சித்தநாதசுவாமி திருக்கோயில், முழையூர், அருள்மிகு பரசுநாதசுவாமி திருக்கோயில், திருவாரூர் மாவட்டம், அரித்துவாரமங்கலம், அருள்மிகு பாதாளேஸ்வரர் திருக்கோயில், கோட்டூர், அருள்மிகு கொழுந்தீஸ்வரசுவாமி திருக்கோயில், கோயில்திருமாளம், அருள்மிகு மகாகாளநாத சுவாமி திருக்கோயில், திருக்கொள்ளம்புதூர், அருள்மிகு வில்வாரண்யேஸ்வரர் திருக்கோயில்;

நாகப்பட்டினம் மாவட்டம், அம்பல், அருள்மிகு பிரம்மபுரீஸ்வரசுவாமி திருக்கோயில், கோடியக்காடு, அருள்மிகு அமிர்தகடேஸ்வரசுவாமி திருக்கோயில், மயிலாடுதுறை மாவட்டம், சாயாவனம், அருள்மிகு சாயாவனேஸ்வரர் திருக்கோயில், பல்லாவனம், அருள்மிகு பல்லாவனேஸ்வரர் திருக்கோயில், மேலப்பெரும்பள்ளம்,

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

## "ஓரணியில் தமிழ்நாடு" உறுப்பினர் சேர்க்கை திட்டம்!

# எட்டே நாட்களில் 62 லட்சம் பேர் புதிய உறுப்பினர்களாகி சாதனை!

*சென்னை, ஜூலை 12-*

*"ஓரணியில் தமிழ்நாடு" மாபெரும் உறுப்பினர் சேர்க்கை திட்டம் தொடங்கப்பட்டு 8 நாட்களில் 62 லட்சம் பேர் புதிய உறுப்பினர்களாக இணைந்துள்ளனர்.*

*கீழடி உண்மைகள் மறைப்பு, இந்தித் திணிப்பு, கல்வி நிதி மறுப்பு போன்ற எல்லா வகையிலும் தமிழ்நாட்டை ஒன்றிய பா.ஜ.க. அரசு வஞ்சித்து வருகிறது. பா.ஜ.க.வின் சூழ்ச்சியிலிருந்து தமிழ்நாட்டின் மண், மொழி, மானம் காக்க, "ஓரணியில் தமிழ்நாடு" எனும் மாபெரும் முன்னெடுப்பை கடந்த 3ம் தேதி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னையில் தொடங்கிவைத்தார்.*

*அதனைத் தொடர்ந்து, அமைச்சர்களும், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களும், மற்றும் தி.மு.க. நிர்வாகிகளும் வீடு, வீடாகச் சென்று தி.மு.க. அரசின் சாதனைகளை எடுத்துக் கூறி, உறுப்பினர்களாக சேர்த்து வருகின்றனர்.*

*"ஓரணியில் தமிழ்நாடு" உறுப்பினர் சேர்க்கை திட்டம் மாநிலம் முழுவதும் 45 நாட்களுக்கு நடைபெறும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஏற்கனவே அறிவித்தார்.*

*இந்நிலையில், "ஓரணியில் தமிழ்நாடு" மாபெரும் உறுப்பினர் சேர்க்கை திட்டம் தொடங்கப்பட்டு 8 நாட்களில் 62 லட்சம் பேர் புதிய உறுப்பினர்களாக இணைந்துள்ளனர். "ஓரணியில் தமிழ்நாடு" முன்னெடுப்பு மாபெரும் வெற்றியை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கிறது. அதிகபட்சமாக விருதுநகர் மாவட்டம் திருச்சுழி சட்டமன்றத் தொகுதியில் 90,418 பேர், "ஓரணியில் தமிழ்நாடு" முன்னெடுப்பில் உறுப்பினர்களாக இணைந்துள்ளனர். அதற்கு அடுத்தப்படியாக, கம்பத்தில் 86,596, கரூர் 84,167, விளாத்திகுளம் 78,431 மற்றும் நத்தத்தில் 77,396 பேர், ஓரணியில் தமிழ்நாடு" மாபெரும் உறுப்பினர் சேர்க்கை திட்டத்தில் இணைந்துள்ளனர்.*

## வெளிநாடுகளில் பயணம் முடித்து வந்துள்ள

# பிரதமர் மோடி, மணிப்பூருக்கு இப்போதாவது செல்வாரா ?

### காங். மூத்த தலைவர் ஜெய்ராம் ரமேஷ் கேள்வி!

*புதுடெல்லி, ஜூலை 12-*

*வெளிநாடுகளில் பயணம் முடித்து இந்தியா வந்துள்ள பிரதமர் மோடி, மணிப்பூருக்கு எப்போது செல்வார் என காங்கிரஸ் மூத்த தலைவர் ஜெய்ராம் ரமேஷ் கேள்வி எழுப்பி உள்ளார்.*

*ஜெய்ராம் ரமேஷ் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், பிரதமர் மோடிக்கு பல்வேறு கேள்விகளை எழுப்பி உள்ளார். அதில், பல்வேறு வெளிநாட்டு பயணத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பியுள்ள பிரதமர் மோடியை இந்தியா வரவேற்கிறது என கூறியுள்ளார்.*

*கலவரத்தால் பாதிக்கப்பட்டுள்ள மணிப்பூர் மாநிலம், கடந்த 2 ஆண்டுகளாக பிரதமர் மோடியை எதிர்பார்த்து காத்திருப்பதாகவும், வெளிநாட்டில் இருந்து இந்தியா வந்துள்ள பிரதமர் மோடி, தற்போதாவது சிறிது நேரம் ஒதுக்கி, மணிப்பூருக்கு செல்வாரா என்றும் வினவியுள்ளார்.*

*பஹல்காம் தாக்குதலில் ஈடுபட்ட தீவிரவாதிகள், இதுவரை நீதியின் முன் நிறுத்தப்படவில்லை, இதுகுறித்து பிரதமர் மோடி ஆய்வு செய்வாரா?, பேரிடர்களால் பாதித்துள்ள இமாச்சல் பிரதேசம் மற்றும் குஜராத் மாநிலங்களின் நிவாரணப் பணிகள் மோடி கவனம் செலுத்துவாரா என வினவியுள்ள ஜெய்ராம் ரமேஷ், நாடாளுமன்ற மழைக் காலகூட்டத்தொடருக்கு முன்பு நடைபெறவுள்ள அனைத்துக் கட்சி கூட்டத்துக்கு பிரதமர் மோடி தலைமை ஏற்பாரா என்றும் சரமாரி கேள்வி எழுப்பி உள்ளார்.*

## பள்ளிக் கல்வித்துறை சார்பில்

# 'உலகப் பொதுமறை திருக்குறள்' நூல்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார் !

**சென்னை, ஜூலை 12-**

**"உலகப் பொதுமறை திருக்குறள்" (TIRUKKURAL Treasure of Universal Wisdom) நூலினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.07.2025) தலைமைச் செயலகத்தில், பள்ளிக் கல்வித் துறை சார்பில் "உலகப் பொதுமறை திருக்குறள்" (TIRUKKURAL Treasure of Universal Wisdom) என்னும் நூலினை வெளியிட்டார். இந்நூலினை தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் தனது முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டத்தின் கீழ், சிகாகோ உலகத் தமிழ் மொழி அறக்கட்டளையுடன் சேர்ந்து கூட்டு வெளியீடாக வெளியிடுகிறது.

இத்திருக்குறள் நூல், எளிதில் வாசிப்பதற்கேற்ற விதத்தில் சீர் பிரிக்கப்பட்ட வடிவத்துடன் தமிழண்ணல் எழுதிய நுண்பொருள் விளக்கவுரை, பி.எஸ்.சுந்தரம் அவர்களின் ஆங்கில மொழிபெயர்ப்பு, ஒவ்வொரு அதிகாரத்திற்கும் ஓவியர் மணியம் செல்வத்தின் ஓவியம் என இருமொழிப் பதிப்பாக அமைந்துள்ளது. திருக்குறளைப் பயில விரும்பும் வெளிமாநிலத்தவர்கள், வெளிநாட்டவர்கள், மாணவர்கள் மற்றும் இளைய தலைமுறையினருக்கு இந்நூல் பெரிதும் பயன்தரும்.

இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் மரு. பி.சந்தரமோகன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ. லியோனி, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் மரு. மா. ஆர்த்தி, பள்ளிக்கல்வி இயக்குநர் முனைவர் எஸ்.கண்ணப்பன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.